# OCTOBER 1991

147

THIRD B.S.M.S. DEGREE EXAMINATION, OCTOBER 1991.

Paper I — GUNAPADAM MOOLIGAI

Part I

Time : Three hours. Maximum : 100 marks.

Answer ALL questions.

1. எரிமுகி, ஆலகாலம், விடமுடிய அமிர்தம், உத்தம கன்னிகை, பிண்டி இவ்வேறு பெயர்கள் எவற்றைக் குறிக்கின்றன? அம்மூலிகையின் இரண்டு முக்கியச் செய்கைகள், மருத்துவப் பயன்களைக் குறிப்பிடுக. (20)

2. அபினி, கஞ்சா, செங்கொட்டை, நேர்வாளம் இவற்றின் சுத்தி முறைகளை விளக்குக. (20)

3. நந்தி வித்தின் பொதுப்பண்பு, செய்கைகள், சேரும் மருந்துகள், மருத்துவப்பயன்களை விளக்குக. (10)

4. மேகநாதக் குளிகை, முருக்கம்விதை மாத்திரை, கபாட மாத்திரை, குங்குமப்பூ மாத்திரை — இவற்றில் சேரும் சரக்குகள், செய்முறை, வழங்கும் முறை, தீரும் நோய்களை விளக்குக. (20)

5. தேற்றான் இளகம், வெண்பூசணி இளகம், அமுக்கிரா இளகம், கேசரி இளகம் — இவற்றில் சேரும் சரக்குகள், செய்முறை, வழங்கும் முறை, தீரும் நோய்களை விளக்குக. (20)

6. மத்தன் தைலம், உளுந்துத் தைலம், வல்லாரை நெய், தண்ணீர்விட்டான் கிழங்கு நெய், ஆடாதோடை மணப்பாகு இவற்றின் மருத்துவப்பயனை விளக்குக. (10)

## APRIL 1993

**[RS 595]**

THIRD B.S.M.S. DEGREE EXAMINATION.

Paper I — GUNAPADAM — MOOLIGAI—I

Time : Three hours. Maximum : 100 marks

Answer ALL questions.

1. புங்கு, சிறுபீளை, பிரண்டை, வெட்பாலை, பறங்கிப்பட்டை, பலாசு, நொச்சி, நெல்லி, நிலாவாரை, தேற்றான் இவற்றின் தாவர இயல் பெயரினைக் குறிப்பிட்டு (Botanical Name) இரண்டு முக்கிய மான செய்கைகளை எழுதுக. *(20)*

2. அகட்டுவாய்வகற்றி, வீக்கமுருக்கி, மூர்ச்சையுண்டாக்கி, பெரு மலம்போக்கி, பாற்பெருக்கி ஆகிய செய்கைகளை விளக்கி ஒவ்வொன் றிற்கும் மூன்று எடுத்துக்காட்டுகள் தருக. *(20)*

3. வேம்பின் பொதுப்பண்பு, செய்கைகள், மருத்துவப் பயன் களை விளக்கி வரைக. *(10)*

4. மலைவேம்பாதித் தைலம், வெண்பூசணி இளகம், பறங்கி ரசாயனம், சுண்டை வற்றல் சூரணம் இவற்றில் சேரும் சரக்குகள், செய்முறை, வழங்கும் அளவு, தீரும் நோய்கள் இவற்றை விளக்குக. *(20)*

5. முருக்கம் விதை மாத்திரை, மெருகுள்ளித் தைலம், உளுந்துத் தைலம், நீர்முள்ளிக் குடிநீர் இவற்றில் சேரும் சரக்குகள், செய்முறை, பயன்படுத்தும் முறை, தீரும் நோய்களை விளக்குக. *(20)*

6. சிறு குறிப்பு வரைக :

(அ) சீந்திற் சர்க்கரை.

(ஆ) நேர்வாள சுத்தி. *(5+5=10)*

———

# APRIL 1995



## THIRD B.S.M.S. DEGREE EXAMINATION.

### Paper I — GUNAPADAM — Mooligai — I

Time : Three hours | Maximum : 100 marks

Answer ALL questions.

1. ஏலாதி சூரணம், தேற்றான் கொட்டை லேகியம், குந்திரிகத் தைலம், விஷமுஷ்டித் தைலம் இவைகளில் சேருகின்ற சரக்குகள், செய்முறை, உபயோகிக்கும் முறை, தீரும் நோய்கள் கூறுக. (15)

2. தமரக நோய், இறைப்பு நோய், குன்ம நோய் இவற்றை நீக்கக்கூடிய மூன்று முக்கிய மூலிகைகளைக் கூறி அவற்றை எவ்வடிவத்தில், வழங்குவீர்கள் என்பதை விரிவாகக் கூறுக. (15)

3. கண்ணுக்கு ஒளியையும், உடலுக்கு அழகையும் தந்து, வலப்பாட்டீரல் செயலை அதிகப்படுத்தக் கூடியதுமான மூன்று முக்கிய மூலிகைகளையும், இவற்றைக் கொண்டு செய்யும் மருத்துவ முறைகளையும் வழங்கும் விதத்தையும் விவரிக்க. (15)

4. (அ) சிறு பீளை, இம்பூரல், அதிவிடயம், மாதுளை ஓடு, கீழாநெல்லி இவை ஒவ்வொன்றின் சிறப்புக் குணம் என்ன? (10)

(ஆ) புங்கவேர், வாழைப்பழம், பூண்டு, கற்றாழை இவைகளிலிருந்து சாறு எடுப்பது எப்படி? (10)





5. தடிப்புண்டாக்கி, நமைச்சலுண்டாக்கி, நாற்றமகற்றி பால்பெருக்கி, பால்சுருக்கி, புழுக்கொல்லி, மேகப்பிணி விலக்கி, முறை வெப்பகற்றி, வியர்வை உண்டாக்கி, வீக்கம் பரப்பி, இச்செய்கைகள் உள்ள சரக்குகள் மூன்றினை எழுதி அவற்றின் சுவை, வீரியங்கள், சேரும் மருந்துகள் எழுதுக. (20)

6. நேர்வாளம், நாபி, சேங்கொட்டை, எட்டி, அபின் இவைகளின் சுத்தி முறைகளைக் கூறுக. இவை சேரும் மருந்துகளையும் கூறுக. (15)

## NOVEMBER 1995

[MB 1038]

# Third B.S.M.S. Degree Examination

Paper I - GUNAPADAM—Mooligai—I

Part I

Time : Three hours Maximum : 100 marks

Answer All questions

1. தாளிசாதி சூரணம், பஞ்ச தீபாக்னி சூரணம் வில்லாதி லேகியம், பீனிசத்தைலம், நாசிரோக நாசத்தைலம் இவைகளில் சேருகின்ற சரக்குகள், செய்முறை, உபயோகிக்கும் முறை, தீரும் நோய்கள், இம்மருந்தின் ஆயுள் காலம் இவற்றை விவரி. (20)

2. பிளட் யூரியா, இளைப்பு நோய், மதுமேகம், தும்மல் நோய் இவற்றை நீக்கக் கூடிய மூன்று முக்கிய மூலிகைகளை கூறி அவற்றை எவ்வடிவத்தில் வழங்குவீர்கள் மற்றும் செய்முறையையும் விவரிக்கவும் (15)

3. ஞாபகசக்தியை உண்டுபண்ணக் கூடியதும், உடலுக்கு அழகையும், மலச்சிக்கல் வராமல் செய்யக் கூடிய மூன்று முக்கிய மூலிகைகளையும், இவற்றைக் கொண்டு செய்யும் மருந்துகளையும், செய் முறைகளையும், வழங்கும் விதத்தையும் விவரி. (15)

4. காய கற்பங்களாகப் பயன்படும் மூலிகைகள் பத்து எழுதி அவற்றை எவ்விதத்தில் பயன்படுத்தலாம் என்று கூறி, பயன்களையும் எழுதுக. (15)

5. சரும நோய்க்கு பயன்படும் மூலிகைகளில் ஒன்பதினை எழுதி, அவை சேரும் மருந்துகளில் ஒவ்வொன்றின் செய்முறையையும் எழுதுக. (20)

6. கர்ப்பப்பை நோய்கட்கு பயன்படும் மூலிகைகளின் பெயர்களையும், இவற்றைக் கொண்டு செய்கின்ற மருந்துகளின் செய்முறைகளையும், வழங்கும் முறையையும் விவரி (15)

———

# APRIL 1996



## THIRD B.S.M.S. DEGREE EXAMINATION

### Part I

### Paper I — GUNAPADAM — MOOLIGAI — I

Time : Three hours Maximum : 100 marks

**Answer ALL questions.**

1. மூலிகை நுட்பங்கள் எத்தனை? அவை யாவை? கண்டு - பரங்கி, பொடுதலை, குடசப் பாலை, பூவரசு, சிறு நாகப் பூ, ஆகியவைகளின் நுட்பங்களை விவரித்து, இவை சேரும் மருந்துகளை தொகுத்து எழுதுக. (20)

2. துவர்ப்பு சுவையும், இனிப்புச் சுவையும் சேர்ந்து வரும் மூலிகைகள் ஐந்து கூறி ஒவ்வொன்றின் உள், வெளி பிரயோகங்களையும், தீரும் நோய்களையும் கூறுக. (15)

3. மேகாரி, முண்டகம், சீதம், நாகம், குண்டலி இவ் வேறு பெயர்களை, குறிக்கும் மூலிகைகளை கூறி, எந்த எந்த மருந்துகளில் சேருகின்றன என்று தொகுத்துக் கூறி, ஒவ்வொரு மூலிகைக்கும் ஒரு செய் முறையை விளக்குக. (15)

4. கீழ்க்காணும் ஐந்து மருந்துகளின் செய்முறை, அளவு, அநுபானம், தீரும் நோய்கள் மற்றும் அவற்றின் ஆயுள் காலத்தை எழுதுக. (20)

   (அ) கண்டாவிழ்தம்.

   (ஆ) கடுக்காய் லேகியம்.

   (இ) புல் தைலம்.

   (ஈ) தாதுவளைக் குடிநீர்.

   (உ) சாம்பராணி பதங்கம்.





5. மூலக்குடோரித்தைலம், பாங்கிப் பட்டை சூரணம், கேசரி லேகியம், சுவாசக் குடோரி மாத்திரை விஷ சுரக் குடிநீர். இவற்றின் செய்முறை, அளவு, துணை மருந்து, அநுபானம், தீரும் நோய்கள், இவற்றை எழுதுக. (15)

6. ஈய சத்துள்ள மூலிகைகளைக் கூறி அவற்றை வடி படும் முறை, அளவு, தீரும் நோய்களை எழுதுக. (15)

———

# APRIL 1997

**[MP 1108]**

சித்த மருத்துவ அறிஞர்

THIRD B.S.M.S. DEGREE EXAMINATION.

Part I

Paper I — GUNAPAADAM – MOOLIGAI

Time : Three hours Maximum : 100 marks

Answer Section A and B separately.

Answer ALL questions.

## SECTION A

1. மூலிகை நுட்பங்கள் எத்தனை? அவை யாவை? கடகரோகிணி, குரோ சாணி ஓமம், மிளகு, சாதிக்காய் குப்பை மேனி ஆகியவைகளின் நுட்பங்களை விவரித்து இவை சேரும் மருந்துகளை தொகுத்து எழுதுக. (20)

2. கரிய போள மாத்திரை, உத்தாமணி சுருக்கு ஆவாரைக் குடிநீர், சீந்தில் சர்க்கரை, நாயு குவி சாம்பல் இம்மருந்து களின் செய்முறை, அளவு, தீரும் நோய்கள் ஆகியவைகளை எழுதுக. (15)

3. துவர்ப்பு சுவையும் கைப்பு சுவையும் சேர்ந்த மூலிகைகள் 5 கூறி அவைகளை வழங்கும் முறை, தீரும் நோய்கள் எழுதுக. (15)

## SECTION B

4. செம்மரம், கோள், முடங்கல், ஆம்பல், கந்தி இவ்வேறு பெயர்களின் மூலிகைகளைக் கூறி சுவை வீரியம், பிரிவு, பொதுக் குணம் முதலியவற்றை எழுதுக. (20)





5. கீழ்க்காய் நெல்லி, சிவனார் வேம்பு, சிறு குறிஞ்சான் விலாமிச்சம் வேர், நொச்சி ஆகிய மூலிகைகளின் தன்மை களைக் கூறி எந்த குற்றத்தை சமப்படுத்தும் என்பதைக் கூறி இவைகளால் தீரும் நோய்களை எழுதுக. (15)

6. நீர் முள்ளிக் குடிநீர், தாளிசாதி வடகம், நொச்சித் தைலம், சுண்டை வற்றல் சுரணம், கட்டுவாதிக் குளிகை இவற்றின் செய்முறை, அளவு, துணைமருந்து, அனுபானம், தீரும் நோய்கள் இவற்றை எழுதுக. (15)

## OCTOBER 1997



சித்த மருத்துவ அறிஞர்

THIRD B.S.M.S. DEGREE EXAMINATION.

Part I

Paper I — GUNAPAADAM — MOOLIGAI

குணபாடம் — மூலிகை

Time : Three hours Maximum : 100 marks

Answer Sections A and B in separate answer books.

Answer ALL questions.

### SECTION A

(அ) திருமரம், கருகம், நந்திவித்து, சிங்கவல்லி, காமரசி — இவை எந்த மூலிகைகளின் வேறுபெயர்கள்? (5)

(ஆ) கீழ்க்கண்ட மூலிகைகளின் தாவரவியல் பெயரைக் குறிப்பிடு.

புன்னை — தாளிசபத்திரி — சீந்தில் — கழற்சிக் கொடி — வேலிப்பருத்தி. (5)

2. அழவணம் — ஈசுவரமூலி — வல்லாரை — பலாசு — பூவரசு — இவற்றின் பொதுக் குணத்தையும், நோய் நீக்கும் சிறப்புத் தன்மைகளையும் விவரி. (20)

3. ஈரல் தேற்றி — உமிழ்நீர்ச் சுருக்கி — கற்கரைச்சி — தமரகச் சோர்வுண்டாக்கி பால் சுருக்கிச் செய்கை உள்ள மூலிகைகள் இரண்டு இரண்டு கூறி வழங்கும் முறையையும் எழுது. (20)





### SECTION B

4. நீரிழிவு — வெண்குட்டம் — மூலம் புற்றுநோய் நீக்கும் மூலிகைகள் இரண்டு இரண்டு கூறி அவற்றிற்கு அதை எப்படி வழங்க வேண்டும் என்பதையும் விரிவாக எழுது. (20)

5. குப்பை மேனியின் செய்கை — குணம் — நோய் நீக்கும் ஆற்றலை விவரி. (10)

6. கீழ்க்கண்ட மருந்துகளின் செய்முறை அளவு — தீரும் நோய் — பத்தியம் — கூறு. (20)

(அ) அரக்குத் தைலம்.

(ஆ) ஏலாதிச் சூரணம்.

(இ) திப்பிலிரசாயனம்.

(ஈ) தூதுவேளை நெய்.

———

APRIL 1998

**[SV 1108]**

சித்த மருத்துவ அறிஞர்

THIRD B.S.M.S. DEGREE EXAMINATION.

Part I

Paper I — GUNAPAADAM — MOOLIGAI

(குணபாடம் — மூலிகை)

Time : Three hours Maximum : 100 marks

Answer Sections A and B in separate answer books.

Answer ALL questions.

SECTION A

1. வல்லாதி என்ற மூலிகையின் முக்கிய பயன்படும் உறுப்பு எது? அதை எங்ஙனம் சுத்தி செய்து, என்னென்ன மருந்துகள் செய்கின்றனர்? இம்மூலிகையின் நோய் நீக்கம் குறித்து விளக்குக. (15)

2. கீழ்க்கண்ட ஐந்து மருந்துகளின் செய்முறை, அளவு, துணை மருந்து, தீரும் நோய்கள் மற்றும் அவற்றின் ஆயுள் காலத்தை எழுதுக. (20)

(அ) அதிமதுரப்பால் (ஆ) அமுக்கிரா இளகம்

(இ) கரிசாலைத் தைலம் (ஈ) துருஞ்சிமணப்பாகு

(உ) சாம்பிராணி பதங்கம்.

3. ஈரல் தேற்றி செய்கை உள்ள மூலிகைகளில் எவையேனும் மூன்றைக் குறிப்பிட்டு, அவை கொண்டு செய்யப் படும் மருந்துகள் மற்றும் தீரும் நோய் நிலைகளை விவரி. (15)

SECTION B

4. மருத்துவத்தில் பயன்படும் கொடி வகைகளில் எவையேனும் ஐந்தைக் குறிப்பிட்டு அவற்றின் நோய் நீக்கும் திறனை விவரி. (20)

5. கீழ்க்கண்ட மூலிகைகளில் அடங்கியுள்ள நச்சுப் பொருட் களின் பெயர்களை குறிப்பிட்டு அவற்றின் செயல்திறனையும் அவற்றைக் கொண்டு நோய் நீக்க எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதையும் விவரி. (15)

(அ) எட்டி

(ஆ) குன்றிமணி

(இ) சித்திரமூலம்

(ஈ) அரளி வேர்

(உ) காக்கைக் கொல்லி விதை.

6. குறிப்புகள் தருக : (15)

(அ) வெங்காயம்

(ஆ) வெள்ளைப் பூண்டு

(இ) முடக்கறுத்தான்

(ஈ) பூனைக்காலி

(உ) தண்ணீர்விட்டான் கிழங்கு.

———————

## OCTOBER 1998

[SM 1108]

சித்த மருத்துவ அறிஞர்

THIRD B.S.M.S. DEGREE EXAMINATION.

Part I

Paper I — GUNAPAADAM – MOOLIGAI

(குணபாடம் – மூலிகை)

Time : Three hours Maximum : 100 marks

Answer Sections A and B in Separate answer books.

*Answswer ALL questions.*

### SECTION A

1. ஈரல் தேற்றி, உறக்கம் உண்டாக்கி, குருதி போக்கடைக்கி ஆகிய செய்கைகளைக் கொண்ட மூலிகை மும்மூன்றினைக் கூறி, அவை மருத்துவத்தில் எவ்வாறு பயன்படுகிறது என்பதை விளக்குக. (20)

2. கீழ்க்கண்ட மூலிகைகளின் வேறு பெயர், தாவர இயற் பெயர், கிடைக்குமிடம், மருத்துவத்தன்மை, இவை சேரக்கூடிய மருந்துகளின் பெயர்களை எழுதுக. (15)

(அ) சேரன் கொட்டை

(ஆ) எட்டி

(இ) நாபி

(ஈ) தூதுவளை

3. மூலக்குடார தைலம், வில்வாதி லேகியம், உரை மாத்திரை இவைகளின் செய்முறை, அளவு, தீரும் நோய்கள் இவற்றினை விரிவாக எழுதுக. (15)

### SECTION B

4. *கீழ்க்கண்டவைப் பற்றி சிறு குறிப்பு வரைக :–* (15)

(அ) உத்தாமணி

(ஆ) கஸ்தூரி மஞ்சள்

(இ) குடசப் பாலை

(ஈ) குப்பமேனி.

5. அகட்டுவாய்வு அகற்றி, இசிவகற்றி, இன்பம் பெருக்கி செய்கையுடைய மூலிகை மும்மூன்றினைக் கூறி அவை எங்ஙனம் மருத்துவத்தில் பயன்படுகின்றன என்பதை விளக்கமாக எழுதவும். (15)

6. அபின், கரியபவளம், அதிமதுரப்பால் இவற்றின் உற்பத்தி, சேகரிப்பு, செய்கை, சுத்தி, குணம், அளவு, சேரும் மருந்துகள் நீங்கும் நோய்கள், கொடுக்கப்பட கூடாதவர்கள் முதலியவற்றை விபரமாக கூறவும். (20)

---

APRIL 1999

**[SG 1108]**

சித்த மருத்துவ அறிஞர்

THIRD B.S.M.S. DEGREE EXAMINATION.

Part I

Paper I — GUNAPAADAM — MOOLIGAI

(குணபாடம் — மூலிகை)

Time : Three hours Maximum : 100 marks

Answer Section A and B in separate answer books.

Answer ALL questions.

SECTION A

1. பரங்கிச் சக்கையை சித்த மருத்துவத்தில் பயன்படுத்தும் முறை பற்றி விளக்கி எழுதுக. இம்மருந்து சாப்பிடும் காலத்துக் கடைபிடிக்க வேண்டிய பத்தியம் பற்றி எழுதுக. (20)

2. கோழையகற்றி செய்கையுள்ள மூலிகைகளில் எவையேனும் மூன்றினைக் குறிப்பிட்டு அவை கொண்டு செய்யப்படும் மருந்துகள் மற்றும் தீரும் நோய்நிலைகளை விவரி. (15)

3. கூவிளம், கேரளம், சுடுவான், பூதநாசம், பாதாளமூலி என்ற வேறு பெயர்களைக் கொண்ட மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் மருந்துகள் பற்றி விவரி. (15)

SECTION B

4. ஏற்றுமதியாகும் மூலிகைகள் பற்றி விரிவாக எழுதுக. (15)

5. கீழ்க்கண்ட ஐந்து மருந்துகளின் செய்முறை, அளவு, துணைமருந்து தீரும் நோய்கள் மற்றும் அவற்றின் ஆயுள் காலத்தை எழுதுக : (20)

(அ) சித்தாதி எண்ணெய்

(ஆ) சேங்கொட்டை நெய்

(இ) வாழை வடகம்

(ஈ) சீந்திற் சூரணம்

(உ) சஞ்சீவி மாத்திரை.

6. சிறு குறிப்புகள் தருக : (15)

(அ) பூனை வணங்கி

(ஆ) சூரணத்தூய்மை

(இ) குடிநீர் விதி

(ஈ) தொகைச் சரக்குகள்

(உ) துணை மருந்து.

## OCTOBER 1999

**[KA 1108]**

சித்த மருத்துவ அறிஞர்

THIRD B.S.M.S. DEGREE EXAMINATION.

Part I

Paper I — GUNAPAADAM — MOOLIGAI

(குணபாடம் — மூலிகை)

Time : Three hours Maximum : 100 marks

Answer Section A & B in separate Answer Books.

Answer ALL questions.

SECTION A

1. மூலிகைகளில் கலப்படம் பற்றி விரிவாக விளக்குக. அதனால் ஏற்படும் தீய விளைவுகள் பற்றி குறிப்பிடுக. (20)

2. துவர்ப்பிச் செய்கையுள்ள மூலிகைகளில் எவையேனும் ஐந்தினைக் குறிப்பிடுக. அவை கொண்டு செய்யப்படும் மருந்துகள் எவை? அம்மருந்துகள் எவ்வாறு குருதிப் பெருக்கை நிறுத்துகின்றன. விவரி. (15)

3. கீழ்க்கண்ட மூன்று மருந்துகளின் செய்முறை, அளவு, துணை மருந்து, தீரும் நோய்கள் மற்றும் அவற்றின் ஆயுள் காலத்தை எழுதுக :

(அ) கும்மட்டிக் குழம்பு

(ஆ) வெண் பூசணி இலேகியம்

(இ) சுக்குத் தயிலம். (15)

SECTION B

4. மருத்துவத்தில் பயன்படும் பழ வகைகளில் எவையேனும் ஐந்தினைக் குறிப்பிட்டு அவற்றின் நோய் நீக்கும் திறனை விவரி. (20)

5. கீழ்க்கண்ட மூலிகைகளில் அடங்கியுள்ள நச்சுப் பொருட்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அவற்றின் செயல் திறனையும், நோய் நீக்க அவற்றைப் பயன்படுத்தும் முறையினையும் விவரி.

(அ) அபினி

(ஆ) நாபி

(இ) கஞ்சா

(ஈ) எட்டி

(உ) நேர்வாளம். (15)

6. சிறு குறிப்பு வரைக :

(அ) சாறுவரா மூலிகைகளில் சாறு எடுத்தல்

(ஆ) குன்றிப் பற்று

(இ) யோசன வல்லி

(ஈ) அமிர்து சர்க்கரை

(உ) உத்தாமணி கருக்கு. (15)

———

# APRIL 2000

## [KB 1108]

THIRD B.S.M.S. DEGREE EXAMINATION.

(Revised Regulations)

Paper I — (குணபாடம் — மூலிகை)

Time : Three hours — Maximum : 100 marks

**Answer Section A and B in separate answer books.**

**Answer ALL questions.**

### SECTION A

1. ஆணைக் கன்றி லொருபிடி அசுரன்விரோதி யிளம் பிஞ்சும்
கானக் குதிரைப் புறத்தோலுங் காலிற்பொடியை மாற்றினதும்
தானைத் தாய்கொல் சலத்துடனே தகவா எட்டொன்றாக்
கொள் நீ
மானைப் பொருவும் விழியாளே வடுகுந் தமிழும் குணமாமே
இதில் சேருகின்ற மூலிகைகள் எவை, எவை அவற்றின்
வேறுபெயர், செய்கை மருத்துவப் பயன் சிறப்பை விவரி. (15)

2. (அ) சித்த மருத்துவம் மூலிகைகளை எப்படியெல்லாம் வகைப்படுத்துகிறது? (5)

(ஆ) அது தொகுத்துள்ள தொகைச் சரக்குகள் பற்றி விவரி. (15)

3. அறுசுவைகளுக்கும், மூன்றி குற்றங்களுக்கும், மூலிகைகளுக்கும் உள்ள தொடர்பை விளக்குக. (15)

### SECTION B

4. தமிழர்கள் நிலத்தைப் பாகுபடுத்துவதன் மூலம் மூலிகைகளையும், அது தீர்க்கும் நோயையும் எவ்வாறு வகைப்படுத்துகின்றனர்? (15)

5. (அ) சடங்கு, சம்பிரதாயங்களில் பயன்படும் மூலிகைகள் ஏதேனும் ஐந்தினைப் பற்றி விவரி. (10)

(ஆ) மருந்து சரக்குகளை எவ்வாறெல்லாம் பெறுகின்றோம் அந்த சரக்குகளை பெறும் முறையை பற்றி விரிவாக எழுது. (10)

6. கீழ்க்கண்ட மருந்துகளை செய்யும் முறை, அளவு, அறுபானம், தீரும் நோய்கள்.

(அ) மலைவேம்பாதித் தைலம்

(ஆ) கட்டுவாதிக் குளிகை

(இ) புளியாரை நெய்

(ஈ) பழகிராம்பு பக்குவ வெண்ணெய்

(உ) கண்டாவிழ்தம். (15)

---

OCTOBER 2000

**[KC 1108]**

THIRD B.S.M.S. DEGREE EXAMINATION.

(Revised Regulations)

Part I

Paper I — (குணபாடம் — மூலிகை)

Time : Three hours Maximum : 100 marks

Answer Section A and B in separate answer books.

Answer ALL questions.

SECTION A

1. இடுமருந்தை நீக்க கூடிய மூலிகைகள் ஆறினை கூறி அவற்றின் தாவர இயற்பெயர், செய்கை, பொதுகுணம், அவை எவ்விதமாக இடுமருந்தை நீக்குகின்றது. விவரி. (15)

2. "கற்பத்தை உண்டால் காயமழியாது" என்ற திருமந்திரர் வாசகத்தை சித்தமருத்துவம் எவ்வாறு சிறப்பிக்கின்றது. கற்பமூலிகைகளை பற்றியும் அதன் சிறப்பை பற்றியும் விரிவாக எழுதுக. (15)

3. ஆகாயத் தாமரை, பூனை வணங்கி, சோதிமூலி, சிறுசின்னி, நத்தைச் சூரி, வெள்ளறுகு ஆகிய மூலிகைகளில் எவ்வகை உலோகச் சத்து அடங்கியுள்ளன என்பதையும், குணத்தையும் அவற்றைக் கொண்டு நோய் நீக்கக் கூடிய மருந்து இரண்டினையும் கூறுக. (20)

SECTION B

4. இக்கு, வண்டு கொல்லி, மேதி, காரவல்லி, பஞ்சந்தாங்கி, மிருதுபலா என்ற மூலிகைகளின் தாவர இயற்பெயர் பொது குணம் மருந்துகள் மூன்றினை கூறி விளக்குக. (15)

5. கீழ்க்காணும் மூலிகைகளின் சுத்தி முறைகளை கூறுக. ஊமத்தை விதை, எட்டி, கஞ்சா, கரிய போளம், அறுகன் வேர், அதிவிடையம், கார்போகரிசி, தேற்றான் கொட்டை, புகையிலை கலப்பை கிழங்கு. (15)

6. திரிகந்தம், பஞ்சவர்க்கம், பஞ்ச மூலம், தச மூலம், அட்ட மூலம், சிறு பஞ்ச மூலம், சாட்சாதம் இவற்றின் சேரும் தொகை சரக்குகள் யாவை? (20)

---